**சார்பு நீதிமன்றம், சீர்காழி.**

S.C. 29/2024

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 26ம் நாள் வியாழக் கிழமை PW7 இன்/ வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்தியசாட்சிய சட்டப் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திருமதி. S. மும்தாஜ், B.Sc., B.L., சார்பு நீதிபதி, சீர்காழி அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

Additional witness examined as PW7

| | | |
|---|---|---|
| Date | : | 26.03.2026 |
| Name | : | கழனியப்பன் |
| Husband Name/Father Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Post | : | |
| Age | : | |

Accused present.

**<u>சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை</u>**

நான் தற்போது திருவெண்காடு காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 27.11.2023ம் தேதிகாலை 9.00 மணிக்கு திருவெண்காடு காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் கீர்த்திவாசன் என்பவர் நிலைய பொருப்பில் இருந்த போது சீர்காழி தாலுக்கா வைத்திஸ்வரன் கோயில் கீழத் தெருவை சேர்ந்த வெங்கடேசன் மகன் முத்துக்கிருஷ்ணன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரினை பெற்று நிலைய மனு எண். 613/2023 பதிவு செய்து விசாரணை செய்து நிலைய குற்ற எண். 219/2023 U/s. 294(b), 386, 506 (ii) 307 IPC r/w 25(1) (b), 27(2) Arms Act ன் கீழ் வழக்கு பதிவு செய்து ஆய்வாளர் அண்ணாதுரை விசாரணைக்கு எடுத்துக்கொண்டார். புகார் **அ.சா.ஆ. 1 ஆக குறியிடுசெய்யப்படுகிறது. முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 2 ஆக குறியிடுசெய்யப்படுகிறது.** இவ்வழக்கின் ஆய்வாளர்அண்ணாதுரை என்பவர் இவ்வழக்கினை புலன் விசாரணை எடுததுக் கொண்டு அன்றைய தினமே 9.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் சத்தியராஜ், ராஜசேகர் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார். அது **அ.சா.ஆ. 3, 4 ஆக குறியிடுசெய்யப்படுகிறது.** சாட்சிகள் முத்துக்கிருஷ்ணன், சங்கர், தமிழ்வாணன், ராஜதுரை, கனகராஜ்,

ராஜசேகர், சத்தியராஜ், பாலமுருகன், ராமச்சந்திரன் ஆகியோர்களை விசாரணை செய்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். வழக்கின் எதிரி இளக்கியராஜ் என்பவரை 27.11.2023 ம் தேதி 12.00 மணிக்கு மங்கைமடம் கடைதெரு அருகே குற்ற காரணம் கூறி கைது செய்து கைது சாட்சிகள் பாலமுருகன், ராமச்சந்திரன் ஆகியோர்கள் முன்னிலையில் எதிரியை விசாரிக்க தானக முன் வந்து கொடுத்த ஒப்பபுதல் வாக்குமூல்தை பதிவு செய்தும் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரி ஆஜர் செய்த 17inch நீளமுள்ள 5 inch வெள்ளை நிற ஒயர் சுற்றபட்ட கைப்பிடியும், சுமார் 12 inch நீளமுள்ள வெட்டும் பகுதியும் கொண்ட மொத்தம் 17 inch நீளமுள்ள இரும்பு அரிவாள் ஒன்று அவர் வீடடிற்கு பின் புறம் மைற்தது வைத்ததை எடுத்து ஆஜர் செய்ததை சாட்சிகள் முன்னிலையில் கைப்பறுதல் மகசரில் கைப்பற்றி மகசரில் கைப்பற்றி உள்ளார்.

ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்ப்டட பகுதி மற்றும் கைப்பற்றுதல் மகசர் **அ.சா.ஆ. 5, 6 ஆக குறியிடுசெய்யப்படுகிறது. படிவம் 95 அ.சா.ஆ. 7 ஆக குறியிடுசெய்யப்படுகிறது.** எதிரியை நிலையம் கொண்டு வந்து நீதிமனன்ற காவலுக்கு உட்படுத்தி உள்ளார். வழக்கு பதிவு செய்த சிறப்பு உதவி ஆய்வாளர் கீர்த்தி வாசன் என்பவரை விசாரணை செய்து இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து 19.12.2023 ம் தேதி U/s. 294(b), 386, 506 (ii) 307 IPC r/w 25(1) (b), 27(2) Arms Act ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

இந்த வழக்கை நான் நேரடியாக விசாரணை செய்ய வில்லைஎன்றால் சரிதான். என் சக அதிகாரி தயார் செய்த ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். அனைத்து ஆவணங்களும் காவல் நிலையத்தில வைத்து தயார் செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. சம்பவ இடம் சென்று சாட்சிகளை விசாரணை செய்யாமல் அனைத்து வழக்கு ஆவணங்களையும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்தோம்என்றால் சரியல்ல. வழக்கின் தடய பொருட்கள் எங்களால் ஜோடிக்க பட்டவை என்றால் சரியல்ல. சம்பவ இடம் செல்லாமலும் சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமலும் வாதி கொடுத்த பொய் புகாரின் அடிப்படையில் எதிரிகள மீது பொய் வழக்கு போட்டுள்ளோம் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும்எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லைஎன்றால் சரியல்ல.